[1973 மார்ச் 15

போதுமான நிதி வசதி இல்லாததால் அபிவிருத்தி செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதை அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவைகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் நிதி உதவி கேட்டு இருக்கிறது. 100 ஹெக்டேர் பரப்புள்ள இடங்களை ஒதுக்கித் தந்தால் மத்திய அரசு நிதி உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு பெரிய நீர்ப் பரப்புக்களை ஒதுக்கித் தந்தால் மத்திய அரசு நிதி உதவி செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, சாத்தனூர் அணைக் கட்டில் ஏராளமான மீன்கள் கிடைக்கின்றன. அவை அத்தனையும் கல்கத்தாவிற்கு அதிகமாகக் கொண்டு சென்றுவிடுகிறார்கள். ஒரு நாளைக்கு 2,000 கிலோ எடுத்துச் செல்கிறார்கள். இதனால் வடாற்காடு மாவட்டத்தில் மீன் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, இவற்றை வடாற்காடு மாவட்டத்திற்கு வேண்டிய அளவுக்கு பகிர்ந்து அளிக்க அரசு ஏதாவது வழி வகை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்னும் அதிகமாக மீன் வேண்டுமென்றால், ஊராட்சி மன்றங்கள் அந்த மீன் வளர்ப்புப் பண்ணைகளை, குட்டைகளை ஏற்படுத்த அக்கரை எடுத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு உதவி செய்ய அரசு தயாராக இருக்கிறது. இதனால் நாம் மேலும் மீன்களை உற்பத்தி செய்து, நமக்குத் தேவை போக மற்றதை கல்கத்தாவிற்கு மட்டுமல்ல, பம்பாய் போன்ற இடங்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

திரு. மு. நல்லசாமி : தலைவரவர்களே, இந்த மீன் வளர்ப்புக் குட்டைகள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஆகியவை நடத்துவதாகச் சொன்னார்கள். அவை லாபகரமாக நடத்தப்படுகின்றனவா ? எத்தனைக் குட்டைகளில் தண்ணீர் இருக்கிறது, தண்ணீர் இல்லாமல் காய்ந்து இருக்கும் குட்டைகள் எத்தனை, என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பற்றிய விவரம் இல்லை என்றாலும், 150 ஊராட்சி மன்றங்களின் சார்பில் பண்ணைகள் நடத்தப்படுகின்றன. அந்த 150 குட்டைகளையும் அரசே எடுத்துக்கொள்ளலாமா என்ற நோக்கம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த ஊராட்சி மன்றக் குட்டைகள் உண்மையிலேயே சரியான முறையில் செயல்படவில்லை. வடாற்காடு மாவட்டத்தில் பாசன ஏரிகள் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பாசன ஏரிகளில் மீன் குஞ்சுகளை விட்டு, அதன் மூலம் மீன் வளர்ப்பு செய்ய அரசு முன்வருமா ?

1973 மார்ச் 15]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த வளர்ப்புக் குட்டைகள் ஆங்காங்கே கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு குட்டை கட்டுவதற்கு ரூ. 2 லட்சம் செலவிடப்படுகிறது. இயற்கையாக இருக்கின்ற ஏரிகளில் மீன்களை விட்டு வளர்க்கும் முறை சரியான முறையாக இல்லை. நமக்கு லாபம் தரும் வகையில் அங்கே குஞ்சுகள் சரியாக பராமரிக்க முடியாது என்பதால்தான் அரசாங்கம் குட்டைகளின் மூலம் மீன் வளர்ப்புச் செய்யும் முறையைக் கையாளுகிறது. சின்னம் சிறு குட்டைகள் ஊராட்சி மன்றங்களால் பராமரிக்கும் குட்டைகள் நல்ல முறையில் இருக்கின்றன.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, மதுரை மாநகராட்சி ஆவணியாபுரத்தில் பெரிய டாங்க் இருக்கிறது. தற்சமயத்தில் அது பெரிய பிஷ்ஷிங் பாயிண்ட் இல்லை என்றாலும், அதை அபிவிருத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய 3 மாவட்டங்களில் பிஷ்ஷிங் டாங்க் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அங்கே பிஷ்ஷிங் டாங்க் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நீலகிரியில் பெரிய மீன் பார்ம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு இருக்கிறது. ஜப்பான் வகை மீன் வளர்க்க ஏற்பாடு ஆகியிருக்கிறது. சேலத்திற்கான விவரம் இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : கிராமப் புறங்களிலே இருக்கின்ற எங்களுக்கு எல்லாம சுரு, வஞ்சிரம் போன்ற மீன் வகைகள் கிடைப்பதில்லை. ஆகவே, அங்கே இருக்கின்ற குட்டைகளில் அம்மாதிரியான மீன்களை வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதிலே வஞ்சனை வளர்க்க வேண்டாம். வஞ்சிரம், சுரு, மீன் வகைகளில் கடலிலே உள்ளவை. அவைகளைக் குட்டைகளில் வளர்க்க முடியாது. கட்லாத்தி, கெண்டை போன்ற மீன் வகைகளைத்தான் குட்டைகளில் வளர்க்க முடியும்.

திரு. த. சோனையா : மதுரை மாவட்டத்திலே மீன் வளர்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். மதுரை நகரில் தெப்பக்குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அதிகமான மீன்கள் அதில் வளர்க்கப்பட்டன............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதுரை நகரில் தெப்பக் குளம் என்று ஏதோ புதிதாக மர்ம நாவல்களில் வருவதுபோல் சொல்ல வேண்டாம். மதுரையும், அங்கேயுள்ள தெப்பக்குளமும் எல்லோருக்கும் தெரிந்தது தான். அதனால் மதுரை தெப்பக்குளம் என்று நேரடி யாகவே சொல்லுங்கள்.